# கேஎம்சிஎச் மருத்துவமனையில் தீராத தலைவலிக்கு நிரந்தர தீர்வு



ஷ்யாம் பாபு

கோவை, மே 23: கேஎம்சிஎச் மருத்துவமைன சிறப்பு நரம்பியல் டாக்டர் ஷ்யாம் பாபு ஒரு புதிய சிகிச்சையை அறிமுகப்படுத்தியுள்ளார். அமெரிக்க நிறுவனத்தால் அங்கீக ரிக்கப்பட்ட ஓனாபொட்டுலினம் டாக்சின்-ஏ ஊசி மருந்தினை பயன்படுத்தி, தீவிர மைக்ரேன் தலைவலியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளித்துள்ளார்.

இந்த நோயாளிகள் தீவிர தலைவலியால், தங்களது தினசரி அலுவல்களை கூட செய்ய முடியாமல் அவதியுற்றனர். ஓனாபொட்டுலினம் டாக்சின்-ஏ ஊசி செலுத்தி சிகிச்சை அளிக்கப்பட்ட இந்த நோயாளிகள் ஒரு மாதத்திற்கு பின் தீராத தலைவலியிலிருந்து முழுவதுமாக விடுபட்டு, தங்களது வழக்கமான வேலைகளை செய்யும் அளவுக்கு இயல்பு நிலைக்கு வந்ததால் மகிழ்ச்சியடைந்தனர்.

நோயாளிகள் திறமையான நரம்பியல் நோய் வல்லுனர், மூவ்மெண்ட் டிஸ்ஆர்டர் சிறப்பு மருத்துவரை அணுகுவதே மிக முக்கியமானதாகும் என்று டாக்டர் ஷ்யாம் பாபு கூறினார்.